IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

CC.NO.250/2022

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SARTHAR |
| FATHER'S NAME | : | SYEDNOOR |
| VILLAGE | : | NATRAMPALLI |
| OCCUPATION | : | VAO |
| AGE | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 20th day of May 2026.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் VAO ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.06.2017ம் தேதி காலை 8.30 மணிக்கு நான் பேர்ணாம்பட்டு நகர கிராம நிர்வாக ஆய்வாளராக பணியில் இருந்த போது கிராம உதவியாளர் எனக்கு போன் செய்து சாலப்பேட்டை அருகே விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார். நான் அங்கு சென்று பார்த்த போது 65லிருந்து 70 வயது மதிக்கதக்க நபர் விபத்தில் காயம்பட்டு இருந்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் கிரேன் என்றும் அதன் ஓட்டுநர் வினோத்குமார் என்றும் விசாரித்த போது சம்பவயிடத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். நான் பேர்ணாம்பட்டு காவல்நிலையத்தில் சென்று புகார் அளித்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் தான் எழுதினேன் மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. எதிரியின் பெயரை சம்பவயிடத்தில் இருந்தவர்கள் சொன்னதனின் பேரில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் விபத்தை யார் ஏற்படுத்தினார்கள் என்று தெரியாததால் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.